# 22 கொழும்பு விவேகானந்த சபை

ஈழ நாட்டில் சிறப்புடன் விளங்கிய சைவசமயமும் அதன் பாரம்பரியங்களும் ஐரோப்பியர்களது ஆட்சிக் காலத்தில் நலிவடைந்தன. அவை மீண்டும் மறுமலர்ச்சி அடைவதற்குச் சைவ சமய நிறுவனங்கள் அளவற்ற பங்காற்றியுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, இராம கிருஷ்ணமிஷன், அகில இலங்கை இந்துமாமன்றம் முதலான சைவ சமய நிறுவனங்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள் கொழும்பு விவேகானந்தசபையின் பணிகள் பற்றிக் கற்போம்.

பாரதத்தின் வீரத்துறவியாகிய சுவாமி விவேகானந்தர் 1893 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிக்காகோ நகரில் நிகழ்த்திய இந்து சமயப் பேருரைகளைத் தொடர்ந்து அவரது பெயரும், பெருமையும் உலகெங்கும் பரவலாயின. நமது நாட்டுச் சைவ மக்களும் அவரது உரையையும், புகழையும் அறிந்து மகிழ்வுற்றனர். சுவாமி விவேகானந்தர் அவர்கள் பொன். குமாரசாமி முதலான நமது நாட்டுச் சைவ அன்பர்களின் அழைப்பை ஏற்று 1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்தார். அவர் கொழும்பு ஜிந்துப்பிட்டியில் அமைந்துள்ள தம்பையா சத்திரத்தில் தங்கி இருந்து சமயப் பேருரை ஆற்றினார். மேலும் கண்டி, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் முதலான இடங்களுக்கும் சென்று அருளுரைகளும் பேருரைகளும் நிகழ்த்தினார்.

சுவாமி விவேகானந்தரது சொற்பொழிவுகளால் கவரப்பட்ட நமது நாட்டு சைவ அன்பர்கள் அவரது பெயரால் விவேகானந்த சபைகளை நிறுவினர். அவை கொழும்பு, யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆனைப்பந்தி, மானிப்பாய் முதலான இடங்களில் நிறுவப்பட்டன. கொழும்பு விவேகானந்த சபை முதன்மையானது.

## தோற்றம்

சுவாமி விவேகானந்தர் 1902 ஆம் ஆண்டு யூலை மாதம் நான்காந் திகதி இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். அவர் அமரத்துவம் அடைந்த ஒன்பதாவது நாளாகிய 1902 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி கொழும்பு ஜிந்துப்பிட்டியில் கொழும்பு விவேகானந்த சபை நிறுவப்பட்டது. திரு. சி. பெருமாள்பிள்ளை, சேர்.பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம், கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் வழிகாட்டலால் சபை வளர்ச்சி கண்டது.

## நோக்கம்

**கொழும்பு விவேகானந்த சபையின் நோக்கங்கள் பின்வருமாறு.**

1. சைவ சமயத்தவரது ஆத்மீகம், கலாசாரம், தேகாரோக்கியம், பொது நலச் செயற்பாடுகள் என்பனவற்றை வளரத்தல்.

2. வேத ஆகம சாஸ்திரங்கள், திருமுறைகள் போதிக்கும் சனாதன தர்மத்தை கற்றல், ஏனையோருக்குக் கற்பித்தல்
3. சைவ மாணவர்கள் சைவச் சூழலில் கல்வி கற்பதற்கேற்ற வகையில் பாடசாலைகளை அமைத்தல்.
4. சைவ சமய பாடத்தினை மேம்படுத்தி, மாணவர்கள் மத்தியில் பரீட்சைகளை நடாத்துதல்.
5. சமயச் சொற்பொழிவுகள், புராணபடனம், சமய ஆய்வு, கதாப்பிரசங்கம் என்பனவற்றுக்கு ஊக்கமளித்தல்.
6. சமயப் பெரியோர்களின் விழாக்களையும் குருபூசைகளையும் கொண்டாடுதல்.

**சமயப் பணி**

கொழும்பு விவேகானந்தசபையின் பணிகளுக்குள் சமயப்பணி முதன்மையானது. சைவ சமயத்தவரது ஆத்மீக கலாசாரங்களை வளர்ப்பது என்ற சபையின் நோக்கத்துக்கமைய ஹெந்தலையில் அமைந்துள்ள தொழு நோயாளர் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் சைவ நோயாளர்களின் வழிபாட்டுக்கென சபை 1956 ஆம் ஆண்டு முருகன் ஆலயத்தினை அமைத்துக் கொடுத்துள்ளது.

வெலிக்கடை, மகர சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் நடத்தை மாற்றத்தின் பொருட்டும் ஆத்மீக வளர்சியின் பொருட்டும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் சைவ நற்சிந்தனைகளைச் சபையினர் வழங்கி வருகின்றனர். அத்துடன் சிறைச்சாலைகளில் உள்ள சைவ சமயக் கைதிகளுக்கு வருடப் பிறப்பு, தீபாவளி, முதலான பண்டிகைக் காலங்களில் ஆடைகளை அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர். மக்களிடையே சமய அறிவை வளர்த்தல் பொருட்டு, சபையினர் காலத்துக்குக் காலம் ஈழத்து அறிஞர்களையும் இந்திய அறிஞர்களையும் வரவழைத்து அவர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகளையும், பிரசங்கங்களையும், உரையாடல்களையும் நிகழ்த்தியுள்ளனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார், சு. சிவபாதசுந்தரனார், நல்லூர் சி. மணிஐயர், வித்துவான் சி. ஆறுமுகம், ஆத்மஜோதி நா. முத்தையா, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி முதலான ஈழத்து அறிஞர்களும் சுவாமி அபேதானந்தர், சுவாமி இராமகிருஷ்ணானந்தர், காந்தியடிகள், குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்தவாரியார் முதலான இந்திய அறிஞர்களும் சபைக்கு வருகை தந்து நல்லுரைகளை வழங்கினர். கொழும்பு வாழ் சைவ மக்கள் இறந்தோரின் இறுதிச்சடங்குகளை ஆற்றுவதற்கு உதவும் முகமாக சபையினர் கொழும்பு முகத்துவாரத்தில் அந்தியேட்டி மடம் ஒன்றை அமைத்தனர். அங்கு சைவக்குருக்கள் ஒருவரை நியமித்து அந்தியேட்டிக் கிரியைகள் ஒழுங்காக நடைபெற வழிவகுத்தனர். சபையின் நோக்கங்களுள் ஒன்றாகிய சமயச் சான்றோரின் நினைவு தினங்களைக் கொண்டாடுதல் என்பதற்கமைய ஆண்டுதோறும் நால்வர், சேக்கிழார், அருணகிரிநாதர், நாவலர் ஆகியோரின் குருபூசைகளையும் சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், சேர். பொன் இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோரின் நினைவு தினங்களைச் சபையினர் விழாவாகவும்

கொண்டாடி வருகின்றனர் சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் ஆகியோரின் நினைவு தினங்களை முன்னிட்டு இலங்கை முழுவதும் பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி என்பவற்றை சபையினர் நடாத்தி பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றனர். திருமுறைகளைப் பண்ணுடன் ஓதி அதனூடாக சைவ மரபுகளை வளர்த்துச் செல்லும் முகமாக சபையினர் தமிழக ஓதுவார்களைக் கொண்டு பண்ணிசை வகுப்புகளை நடாத்துகின்றனர். அத்துடன் திருமுறைகளின் பெருமைகளை வெளிப்படுத்தும் முகமாக சபையினர் 1962, 1975 ஆம் ஆண்டுகளில் திருமுறை விழாக்களை நடாத்தினர். சுவாமி விவேகானந்தரது இலங்கை விஜய நூற்றாண்டு ஞாபகார்த்தமாக சபையின் வளாகத்தில், சுவாமிகளது ஒன்பதடி திருவுருவச் சிலை சபையினரால் அமைக்கப்பட்டது. அத்தோடு சபையினரின் வேண்டுதலுக்கு அமைய இலங்கை அஞ்சல் திணைக்களத்தினர் 1997 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜயம் ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டுக் கௌரவித்துள்ளனர்.

### ஈ. கல்விப் பணி

கொழும்பு விவேகானந்த சபையினது நோக்கங்களில் ஒன்றாகிய சைவ மாணவர்கள் சைவ சமயச் சூழலில் கல்வி கற்க வசதியளித்தல் என்பதற்கமைய சபை பல சைவப் பாடசாலைகளை உருவாக்கியது. அவ்வகையில் 1926 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதனை ஆரம்பித்தோர் சுவாமி விபுலானந்தர், சச்சிதானந்த ராஜயோகிகள் ஆகியோர் ஆவார். இதனடிப்படையில் 1954 ஆம் ஆண்டு நீர் கொழும்பிலும் விவேகானந்த வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே இன்று நீர் கொழும்பு விஜயரெட்ணம் இந்துக் கல்லூரி என அழைக்கப்படுகின்றது. அனுராதபுரம், விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயமும் சபையினரின் அனுசரணையோடு அமைக்கப்பட்டது. சைவ சமய பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை சபை காலத்துக்குக் காலம் நடாத்தி அவர்களது கற்பித்தல் செயற்பாடுகள் மேன்மையுற வழிவகுத்துள்ளனர். சபையின் நோக்கங்களில் ஒன்றாகிய சைவ மாணவர்களிடத்தில் சைவ சமய பாடப் பரீட்சையை நடாத்தி சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்குதல் என்னும் நோக்கத்தினை முன்னெடுக்கும் முகமாக 1930 ஆம் ஆண்டு முதல் தரம் மூன்று தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கு அகில இலங்கை சைவ சமயப் பாடப் பரீட்சையை சபை நடாத்தி வருகின்றது. முதலாம் இடத்தினைப் பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தக்க சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

### உ. வெளியீட்டுப் பணி

கொழும்பு விவேகானந்த சபை சஞ்சிகை, பாட நூல்கள், பதிப்புக்கள், துண்டுப் பிரசுரங்கள் என்ற அடிப்படையில் வெளியீட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. சபையின் வெளியீட்டுப் பணிகளுள் சிறப்பானது **விவேகானந்தன்** என்ற சஞ்சிகை வெளியீடாகும். அது 1925 ஆம் ஆண்டு முதல் வெளிவருகின்றது.

அதன் முதலாவது ஆசிரியராக சுவாமி விபுலானந்தர் விளங்கினார். ஆரம்பத்தில் மாதம் தோறும் வெளிவந்த இவ் இதழ் தற்போது மூன்று மாதத்துக்கு ஒரு முறை வெளிவருகின்றது. இன்றைய இலவசபாட நூல்கள் வெளிவருவதற்கு முன்னர் சபையினர் தரம் மூன்று முதல் தரம் பத்து வரையிலான வகுப்புகளுக்குரிய சைவசமய பாடத்திட்டத்திற்கு அமைய பாடநூல்களை வெளியிட்டுள்ளனர்.

தரம் மூன்று முதல் தரம் எட்டு வரையிலான மாணவர்களுக்கு **சைவபோதினி** என்ற பாடநூலும் தரம் ஒன்பது, தரம் பத்து மாணவர்களுக்கு **சைவசமயம்** என்ற பாடநூலும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை அனைத்து சைவ மாணவர்களும் வாங்கிக் கற்க வேண்டும் என்பதற்காக சபையினர் குறைந்த விலையில் விற்பனை செய்துள்ளனர். பன்னிரு திருமுறைத்திரட்டு, நீதிநூல், ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடை முதலான நூல்களை சபை மீள்பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. பிற்பட்டவர்களின் ஆலயப் பிரவேசம், கதிர்காம ஆலயத்தினை சைவ சமயத்தவர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல் என்பவற்றுக்காக சபை துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### ஊ. சமூகப் பணி

காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் மற்றும் வன் செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை சபையினர் ஆற்றியுள்ளனர். 1947 ஆம் ஆண்டு கொழும்பையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அவதியுற்ற மக்களுக்கு சபையினர் உணவு வழங்கினர். அத்தோடு களனி, வத்தளை, ஹெந்தலை முதலான இடங்களில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து அவர்களுக்கு தற்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன் செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களில் 320 பேரை சபையின் மண்டபத்தில் தங்க வைத்து அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்கியுள்ளனர். 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மேல்மாகாண மக்களுக்கு சபையினர் உலர் உணவுப் பொருட்களையும் உடைகளையும் வழங்கியுள்ளனர். இவ்வாறு கொழும்பு விவேகானந்த சபையினர் தமது சமூகப் பணிகளை மேலும் தொடர்ந்து வருகின்றனர். இத்தகைய பலதரப்பட்ட பணிகளால் உயர்ச்சி கண்ட கொழும்பு விவேகானந்த சபை 2002 ஆம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. அதன் பணிகள் பின் வந்த சைவ சமய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைவதோடு சைவசமய வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது.

## பாடச்சுருக்கம்

- கொழும்பு விவேகானந்த சபை இலங்கையில் தோன்றிய சைவசமய நிறுவனங்களுள் ஒன்று.
- சுவாமி விவேகானந்தரது இலங்கை விஜயத்தின் ஞாபகமாக ஆரம்பமானது.
- ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சமயம், கல்வி, வெளியீடு, சமூகம் என்ற நிலைகளில் பணிகளை ஆற்றி வருகின்றது.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இலங்கையில் சைவசமயத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றும் நிறுவனங்களைக் குறிப்பிடுக.
2. கொழும்பு விவேகானந்தசபையின் நோக்கங்கள் மூன்று தருக.
3. கொழும்பு விவேகானந்த சபையின் சமயப்பணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.
4. கொழும்பு விவேகானந்த சபையால் அமைக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்களை எழுதுக.
5. கொழும்பு விவேகானந்த சபையால் வெளியிடப்படும் சஞ்சிகையின் பெயரைத் தருக.

## ௐ செயற்பாடு

♦ **‘‘கொழும்பு விவேகானந்த சபையின் பணிகள்’’** என்னும் தலைப்பில் பேச்சொன்றை ஐந்து நிமிடமளவில் வகுப்பறையில் நிகழ்த்துக.

♦ உங்கள் பிரதேசத்தில் உள்ள சைவசமய நிறுவனம் ஒன்றின் பணிகளை கீழ் வரும் தலைப்புகளில் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

- தோற்றம்
- நோக்கம்
- சமயப்பணி
- கல்விப்பணி
- வெளியீட்டுப்பணி
- சமூகப்பணி



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக